# உயர்கல்வியில் சரயற்கை நுண்ணறிவு: டிடஸ்மண்ட் ல் தலையையில் புதிய SU

By சத்தார்த் பள்ளை

**Tamil Murasu, Page 2, Section:** சிங்கப்பூர்
**Thursday 2 April 2026**
**264 words, 225cm² in size**
**8,400 circulation**

New committee to guide AI use in Singapore’s higher-education sector, led by Minister Desmond Lee

# உயர்கல்வியில் செயற்கை நுண்ணறிவு; டெஸ்மண்ட் லீ தலைமையில் புதிய குழு

**சித்தார்த் பிள்ளை**




சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகத்தின் யோங் புங் ஹாவ் சட்டப்பள்ளியில் புதன்கிழமை (ஏப்ரல் 1) நடைபெற்ற ‘ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் கல்விக் கருத்தரங்கு 2026’ல் உரையாற்றும் கல்வி அமைச்சர் டெஸ்மண்ட் லீ. **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

சிங்கப்பூரின் உயர்கல்வியில் செயற்கை நுண்ணறிவுப் (ஏஐ) பயன்பாட்டை வழிநடத்த புதிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

அக்குழுவிற்குக் கல்வி அமைச்சர் டெஸ்மண்ட் லீ தலைமை தாங்குகிறார்.

‘ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் கல்விக் கருத்தரங்கு 2026’ புதன்கிழமை (ஏப்ரல் 1) சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகத்தின் யோங் புங் ஹாவ் சட்டப்பள்ளியில் நடைபெற்றது.

‘ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்’ நாளிதழும் சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகமும் இணைந்து ‘உயர்கல்வியில் செயற்கை நுண்ணறிவு: மிகைப்படுத்தப்பட்ட ஒன்றா நம்பிக்கையா’ எனும் கருப்பொருளில் அதனை நடத்தின.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட அமைச்சர் லீ புதிய குழு பற்றி அறிவித்தார். அக்குழுவில் கல்விக்கான மூத்த துணை அமைச்சர் டாக்டர் ஜனில் புதுச்சேரி இடம்பெற்றுள்ளார்.

தன்னாட்சிப் பல்கலைக்கழகங்களின் தலைவர்களும் பலதுறைத் தொழிற்கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்விக்கழகங்கள் ஆகியவற்றின் தலைமையாசிரியர்களும் அதில் அங்கம் வகிப்பர்.

அனைத்து உயர்கல்வி நிலையங்களுக்கும் இடையே உத்திபூர்வ வழிகாட்டுதலை வழங்கவும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதுமே அக்குழுவின் முக்கிய நோக்கங்களாகும்.

மேலும், சிங்கப்பூரை ஏஐ துறையில் உலகளவில் முன்னிலைப்படுத்த பிரதமர் லாரன்ஸ் வோங் வைத்திருக்கும் தேசிய இலக்கிற்கும் அக்குழு பெருந்துணையாக இருக்கும் என்று அமைச்சர் லீ பெருமையுடன் கூறினார்.

மாணவர்கள் ஏஐ தொழில்நுட்பத்தை ஒரு குறுக்குவழியாகப் பயன்படுத்தக் கூடாது என்று அமைச்சர் தமது உரையில் எச்சரித்தார். அவ்வாறு செய்தால், சிந்திக்கும் திறன் பாதிக்கப்பட்டு, கல்வியின் நோக்கத்தையே அது சிதைத்துவிடும் என்றார் அவர்.

மாறாக, கல்வியை மேம்படுத்தும் ஓர் உந்துசக்தியாக ஏஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதற்கிடையே, முன்னாள் மாணவர்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏஐ பாடத்திட்டங்களுக்குச் சிறப்புச் சலுகையாக ஓராண்டுக்குக் கட்டணக் கழிவுகள் வழங்கப்படும் என்று திரு லீ அறிவித்தார்.

ஏஐ துணையுடன் மாணவர்களை அவர்களின் முதல் வேலைக்கும், எதிர்காலப் பணி மாற்றங்களுக்கும் எவ்வாறு தயார்ப்படுத்திக்கொள்வது என்பது குறித்து கருத்தரங்கில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மாணவர்களின் கற்றல் அனுபவத்தை மேம்படுத்தவும் கல்வி வாய்ப்புகள் அனைவருக்கும் சமமாகக் கிடைப்பதை உறுதிசெய்யவும் ஏஐ எவ்வாறு உதவும் என்பது குறித்தும் ஆராயப்பட்டது.

siddharth@sph.com.sg

Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.